UNIT – II

Sub Name – மொழியியல்

Class – I MA தமிழ்

code – GETA 15A

# 2. ஒலியியல்

பேச்சொலிகள் பிறக்கும் முறை, அவற்றின் வகைப்பாடு, அவற்றின் எண்ணிக்கை, அவற்றோடு வழங்கும் மேற்கூற்று ஒலிகள், துணை ஒலிப்பு முறைகள் போன்றவற்றையும் ஒலியியல் வகைகளையும் அவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளையும் முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் விளக்கும் மொழியியல் பகுதியே ஒலியியல் (phonetics) எனப்படுகிறது. ஒருமொழியில் இடம்பெறும் கூறுகளும் மிகச்சிறிய கூறு ஒலி (phone speech sound) ஆகும். இதுவே மொழி விளக்கத்தில் இடம்பெறும் அடிப்படை அலகாகும் (unit) ஒலி என்ற அலகிற்கு அல்லது பேச்சொலிக்கு மொழியில் பொருள் (meaning) ஏதுமில்லை. எனினும் பேச்சொலிகள் குறிப்பிட்ட பொருளைப் புலப்படுத்தக் காண்கிறோம். அதாவது, ஒலிகளின் சேர்க்கையால் சொற்கள், தொடர்கள் போன்றவை பொருளுள்ள மொழிக் கூறுகளாகக் கருத்துகளை வெளிப்படுத்துகின்றன. எழுத்து வழக்கு இல்லாத மொழிகளில் இது போன்ற பேச்சொலிகளின் சேர்க்கைகளே கருத்து வெளிப்பாட்டிற்கு அடிப்படையாக அமைகின்றன. இத்தகைய பேச்சொலிகளைப் பொது ஒலியியல் (general phonetics) என்ற பிரிவிலும் சிறப்பு ஒலியியல் என்ற பிரிவிலும் விளக்கலாம்.

பொது ஒலியியல் என்பது பொதுவாகப் பேச்சொலிகளின் பிறப்பு, அவற்றின் தன்மைகள், அவற்றின் வகைப்பாடு, அவை சொற்களில் ஒருங்கிணையும்போது ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றை விளக்கும் மொழியியல் பிரிவாகும். சிறப்பு ஒலியியல் என்பது ஒரு குறிப்பிட்ட மொழியில் இடம் பெறும் பேச்சொலிகள் பற்றியதாகும். இவ்வியலில் பொது ஒலியியல் முதலில் விளக்கப்பட்டு, பின்னர், தமிழ் ஒலியியல் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

**ஒலியியல் வகைகள்**

பேச்சொலிகள் மூன்று வகைகளாக ஆராயப்படுகின்றன. அவையாவன:

1) ஒலிப்பியல் (articulatory phonetics)

2) கேட்பொலியியல் (auditory phonetics)

3) ஒலியிக்கவியல் / பௌதீக ஒலியியல் (acoustic phonetics)

ஒலிப்பியல் உடறகூற்றில் நோக்கில் ஒலிகளின் பிறப்பு குறித்து விளக்குகிறது. ஒருவர் எழுப்பும் பேச்சொலிகளை அவரது பேச்சைக் கேட்டு மற்றொருவர் எப்படி உணர்கிறார் – புரிந்து கொள்கிறார் என்பது பற்றிய கருத்துகள் கேட்பொலியியலில் இடம் பெறுகின்றன. பேச்சொலிகளின் பண்பு நலன்களை ஒலி ஆராய்ச்சிக் கருவிகளின் மூலம் கண்டறிவதே ஒலியியக்கவியலின் செயலாகும்.

## ஒலியுறுப்புகள்

பேச்சொலிகளை ஒலிப்பதற்குப் பயன்படும் உடல் உறுப்புகளே ஒலியுறுப்புகள் எனப்படுகின்றன. இதழ், நுரையீரல், தொண்டை, வாய், மூக்கு, பல், நாக்கு, அண்ணம் போன்றவை இதிலடங்கும். இவற்றிற்குப் பிற செயல்கள் முதன்மைச் செயல்களாக இருந்தாலும் பேச்சொலிகளை உருவாக்குவதில் இவை பெரும் பங்கு வகிக்கின்றன. இவ்வுறுப்புகளை மூன்று பிரிவுகளாக ஒலியியலார் காட்டுவர் 1) நெஞ்சுப் பகுதி 2) தொண்டைப் பகுதி 3) தலைப்பகுதி. இந்தப் பகுதிகளில் முறையே உயிர்த்தல் (respirtaion) குரல் எழுப்புதல் (voicing) ஒலித்தல் (articulation) என்ற மூன்று செயல்கள் நடைபெறுகின்றன.


## உயிர்த்தல்

உயிர்த்தல் முறையின் தலையாயப் பணி இரத்தத்திற்கு உயிர்க் காற்றினை வழங்குவதுதான். வெளிக்காற்று உள்ளே செல்வதற்கு அகவுயிர்ப்பு (inspiration) என்றும் உள் காற்று வெளியே வருவதற்குப் புறவுயிர்ப்பு (expiration) என்றும் பெயர். புற உயிர்ப்பும் சேர்ந்தது. சுவாசிப்பதற்குப் பெரிதும் உதவுவது நுரையீரல். இது நெஞ்சறையில் உள்ளது. நுரையீரல் அமைந்துள்ள அடிப்பகுதி (diaphragm) என்றழைக்கப்படுகிறது. உந்தியிலுள்ள தசைநார்கள் சுருங்குவதால் அது கீழ் நோக்கி விரிகிறது. இதனால் அதனோடு இணைந்துள்ள கீழ் விலா எலும்புகள் பக்கவாட்டில் விரிகின்றன. இந்த இயக்கத்தினால் வெளிக்காற்று மூக்கு வழியாக நுரையீரல்களுக்குச் செல்கிறது. இந்த அகவுயிர்ப்பினால் நுரையீரல்களுக்குள் காற்று நிரம்பி வெளி அழுத்தத்திற்குச் சமமாகிறது. இதனால் உந்தி மேல்நோக்கி எழும்பும். பின்னர், காற்று வெளியேற்றப்படும். இது புற உயிர்ப்பாகும். அதாவது உந்தி கீழும் மேலுமாக மாறி மாறி இயங்குவதால் நுரையீரல்கள் விரிந்து சுருங்கி மூச்சுக்காற்று உள்ளே செல்லவும் வெளியே வரவும் முடிகிறது. பொதுவாகப் பெரும்பான்மையான பேச்சொலிகள் புற உயிர்ப்புகளாக ஒலிக்கப்படுகின்றன.

## குரல் எழுப்புதல்

குரல் எழுப்புவதற்கு முக்கியக் கருவி கீழ் தொண்டையில் அமைந்துள்ள குரல்வளை மடல்களே (vocal cords) குரல்வளை மடல்களின் முக்கிய வேலை நுரையீரலிலிருந்து வரும் காற்றுக்கு அடைப்பானாகப பயன்படுவதுதான். அதனால் சுவாசிக்கும்போது மூச்சுக்காற்று எவ்வித மாற்றத்தையும் அடைவதில்லை. மூச்சுக்காற்று பேச்சொலிகளை உண்டாகுவதற்கு ஏற்ப அங்கு சில மாற்றங்களைப் பெறுகிறது.

### பேச்சுறுப்புகள்




1. மூக்கறை
2. இதழ்
3. பல்
4. வாயறை
5. கடையண்ணம்
6. நாக்கு
7. மேல் தொண்டை
8. கீழ்த்தொண்டை
9. குரல்வளைநாண்
10. மூச்சுக்குழாய்

தொண்டையையும் நுரையீரல்களையும் மூச்சுக் குழல் இணைக்கிறது. இந்த மூச்சுக்குழல் மெல்லிய குருத்தெலும்புகளால் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழலின் மேற்பகுதியிலுள்ள வளையம் மட்டுமே முழு வட்டமாகவும் ஏனைய வட்டங்கள் அரை வட்டங்களாகவும் அமைந்திருக்கும். மூச்சுக் குழல் வாயிலாக வெளியேறும் மூச்சு தொண்டை வழியே மேல்நோக்கிச் செல்கிறது. மூச்சுக்குழலின் வளையங்களில் முழு வட்டமாக இருக்கும் மேற்பகுதியில் கீழ் தொண்டை அமைந்துள்ளது. இதன் அமைப்பு ஒரு பெட்டியைப்போல உள்ளது. இந்தப் பெட்டியில்தான் குரல்வளையும் அதனைச் சூழ்ந்தமைந்துள்ள குரல்வளை மடல்களும் காணப்படுகின்றன. இவை மெல்லிய சவ்வுகளால் ஆன அதே நேரத்தில் சுருங்கி விரியும் தன்மையுடையன. இந்தக் குரல்வளை மடல்களுக்கு இடைப்பட்ட வெளியைக் குரல்வளை (glottis) என்பர்.

குரல்வளை மடல் முழுவதும் மூடித்திறந்து வேறு எந்தவித மாற்றமும் அடையாவிட்டால் ஒருவித ஒலி உண்டாகும். இது குரல்வளை அடைப்பொலி (glottal stop) என்று பெயர் பெறுகிறது. இந்த ஒலியை அ, ஆ என்ற உயிரெழுத்துகளை ஒலிக்கும்போது அந்தந்த உயிருக்கிடையே உண்டாக்குகிறோம். இரசிய மொழிகளில் ஒன்றான ஜார்ஜின் மொழியிலும் ஜூலு மொழியிலும் இது பேச்சொலியாக அமைந்துள்ளது.

குரல்வளை மடல்கள் ஓரளவு திறந்த நிலையிலிருந்து மூச்சுக்காற்று வெளியே வரும்போது அந்தக் காற்றின் தாக்கத்தால் குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. இது குரல் (voice) என்று குறிப்பிடப்படுகிறது. இப்படிக் குரல்வளை மடல்கள் அதிர்வுடன் ஒலிக்கப்படும் ஒலிகள் குரல் ஒலிகள் அல்லது அதிர்வு ஒலிகள் (voiced sounds) என்றழைக்கப்படுகின்றன. உயிரொலிகள் பெரும்பான்மையும் அதிர்வொலிகளாகவே அமைந்துள்ளன.

குரல்வளை மடல் மூச்சுக் காற்றுத் தாக்கத்தால் அதிர்வு அடையாத நிலையில் திறந்திருந்து பேச்சொலி ஒலிக்கப்படும்போது அந்த ஒலிகளைக் குரலிலா ஒலிகள் (voiceless sounds) என்று அழைக்கிறோம். தமிழில் வல்லின ஒலிகள், சிறப்பாக மொழிக்கு முதலிலும் இரட்டித்தும் வரும்போதும் குரலிலா ஒலிகளாகவே ஒலிக்கப்படுகின்றன. ஆகவே தொண்டையில் மூச்சுக் காற்று பேச்சொலியாக மாறும்போது குரல்வளை மடல்கள் அதிர்வு பெற்று குரல் ஒலிகளாவுகம், அதிர்வு பெறாமல் குரலிலா ஒலிகளாகவும் அமைகின்றன. குர்லவளை அடைப்பொலி என்பது ஒரு தனி ஒலியாகும்.

**ஒலித்தல்**

ஒலித்தலில் மூக்கு, நாக்கு, வாய், பல், இதழ் ஆகியன பங்கு பெறுகின்றன. தொண்டையின் மேல்பகுதி, அதாவது மேல் தொண்டை, வாயறையையும் மூக்கறையையும் இணைக்கிறது. மேல் தொண்டையில் குரல்வளை மூடி (epiglottis) இருக்கிறது. சாதாரணமாகச் சுவாசிக்கும்போது

## ஒலி அட்டவணை

| ஒலிப்பு முறை / ஒலிப்பிடம் | ஈரிதழ் | இதழ் பல் | அண்பல் நுனிநா | அண்பல் அண்ணம் | அண்பல் நாமடி | இடைநா இ. அ. | க. நா க. அ. | உள்நாக்கு மேற்தொண்டை | குரல் வளை அமைப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அடைப்பொலி | p̣ b | p̣ ḅ | t̲ d̲ | t d | ṭ ḍ | c j | k g | q G | ʔ |
| மூக்கொலி | M m | Ṃ ṃ | N̲ n̲ | N n | Ṇ ṇ | Ñ ñ | Ṉ ṉ | Ṅ̲ ṅ̲ | |
| உரசொலி பிளவு | ϕ β | ƒ v | θ ð | | | j | x ɣ | h̲ H̲ | h H |
| குழிவு | | | | s z | ṣ ẓ | š ž<br>s z | | | |
| வருடொலி | | | | r | ɽ | | | | |
| ஆடொலி | | | | ṙ r | ṛ ṛ | | | | |
| மருங்கொலி | | | | L l | Ḷ ḷ | | | | |

அது திறந்தே இருக்கும். அதனால் மூச்சுக்காற்று எவ்விதத்தடையும் இல்லாமல் சென்று வரும்.

மேல்தொண்டையறை (pharyngeal cavity) வாயறை (oral cavity) மூக்கறை (nasal cavity) ஆகியவை ஒலியூக்கிகளாக () அமைகின்றன. இவை குரல்வளை மடல்களால் உண்டாகும் அதிர்வுகளை வெவ்வேறு வகையில் ஊக்குவிப்பதால் வெவ்வேறு பேச்சொலிகள் அமைகின்றன. ஒலியூக்கிகளில் ஒன்றான வாயறையில் பல உறுப்புகள் (நாக்கு, இதழ், பல், அண்ணம்) இருப்பதாலும் அவற்றில் நாக்கும் பல்லும் இயங்கு தன்மை பெற்றிருப்பதாலும் அந்த இரண்டும் பலவிதமான பேச்சொலிகள் பிறப்பதற்குக் காரணமாக அமைகின்றன.

தொண்டையின் பின்சுவரில் நாக்கின் அடிப்பாகத்தின் மூலம் மேல் தொண்டையைக் கொண்டுவந்து பொருத்த முடியும். இந்நிலையில் பிறக்கும் ஒலிகளை மேல்தொண்டை ஒலிகள் (pharyngeal sounds) என்று அழைப்பர். அரேபிய மொழிகளில் இவ்வகை ஒலிகளைக் காண முடிகிறது.

வாயின் மேல்பகுதி அண்ணம் என்று அழைக்கப்படுகிறது. அண்ணத்தின் இறுதிப்பகுதி மிருதுவாக இருக்கும். இதற்கு அண்ணக்கடை (velum) என்று பெயர். அண்ணக்கடை மேலே தூக்கப்பட்டால் அண்ணக்கடை அடைப்பு (velar closure) ஏற்படும். அண்ணக்கடை அடைப்பு ஏற்பட்டால் காற்று வாயறை வழியாகச் செல்லும். அப்படிப்பட்ட ஒலிகள் வாயொலிகள் (oral) என்று அழைக்கப்படுகின்றன. அண்ணக் கடையில் அடைப்பு ஏற்படாவிட்டால் காற்று மூக்கு வழியாகச்செல்லும். அத்தகைய ஒலிகளே மூக்கொலி அல்லது மெல்லின் ஒலிகள் (nasal sound) என்று குறிப்பிடப்படுகின்றன. வாயொலிக்கும் மூக்கொலிக்கும் மாற்றங்களை அடைவதற்கு வாயறையிலுள்ள உறுப்புகளே உதவுகின்றன.

வாயறையிலுள்ள முக்கிய உறுப்பு நாக்கு. இது இயங்கும் தன்மை உடைய உறுப்பாக இருப்பதால் அது முழுவதும் ஒரே சமயத்தில் வேறுபடாமல் ஒரு பகுதியே நேரடிப் பங்கு பெறுகிறது. அதனால் நாக்கைச் சிறுபாகங்களாகப் பிரித்து ஒலியியலில் பேச வேண்டியிருக்கிறது. நாக்கின் நுனியை நாநுனி (apex) என்றும் முன் பகுதியை முன்நா அல்லது நுனிநா (front of the tongue) என்றும் பின்பகுதியைக் கடைநா (back of the tongue) என்றும் அடிப்பகுதியை அடிநா (root of the tongue) என்றும் ஒலியியல் பிரித்துக் குறிப்பிடுகின்றது.

இதழ்கள், மேலிதழ், கீழிதழ் என்று வேறுபடுத்திக் குறிப்பிடப்படும். கீழிதழ் மட்டும் இயங்கும் உறுப்பாகக கருதப்படுகிறது. வாயறையின் மேல்பாகத்தை அண்பல் (teeth ridge) அண்ணம் (palate) என்றும் பிரித்து அண்ணத்தின் கடினமான முன்பகுதியை நுனி அண்ணம் (front of the

palate) என்றும் மிருதுவான பின்பகுதியைக் கடை அண்ணம் (velum soft palate) என்றும் குறிப்பிடுவர்.

ஒலித்தல் தொழிலுக்குரிய உறுப்புகளை ஒலிப்பான்கள் (articulators) என்று அழைப்பார்கள். அவற்றை இயங்கு ஒலிப்பான்கள் (active articulators) என்றும் இயங்கா ஒலிப்பான்கள் (passive articulators) என்றும் இருவகைப்படுத்தலாம். கீழிதழும், நாக்கும் இயங்கு ஒலிப்பான்களாகும். மேலிதழ், மேற்பல், அண்ணம், மேல் தொண்டை ஆகியவை இயங்கா ஒலிப்பான்களாகும். இயங்கும் ஒலிப்பானும் இயங்கா ஒலிப்பானும் சேருமிடம். அதாவது தொட்டுக் கொண்டோ, தொடாமல் நெருங்கியோ இருக்குமிடம் ஒலிப்பிடம் (place of articulation) என்று அழைக்கப்படும். ஒலிப்பிடம் ஒன்றாக இருந்தாலும் ஒலிப்பு முறையால் (maner of articulation) வெவ்வேறு ஒலிகளை உண்டாக்கலாம். இது இயங்கா ஒலிப்பானும் இயங்கு ஒலிப்பானும் சேரும் முறையையும் அண்ணக்கடை அடைப்பு அமையும் முறையையும் குறிக்கும். இயங்கும் ஒலிப்பாணும் இயங்கா ஒலிப்பானும் சேர்ந்து காற்றை முழுவதும் தடைசெய்யலாம். அல்லது விட்டுவிட்டுத் தடைசெய்யலாம் அல்லது நாவின் பக்கவாட்டின் வழியே போகும்படிச் செய்யலாம். இதுவே ஒலிப்புமுறை என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு ஒலிக்கும் முறையினை ஏழு வகையாகப் பிரிக்கலாம். இவற்றில் ஆறு வகை மெய்யொலிகளுக்கு உரியன. மற்றொன்று உயிரொலிக்குரியது.

**அவையாவன**

1. தடையொலி அல்லது வெடிப்பொலி (stop or plosive)
2. மூக்கொலி (nasal)
3. உரசொலி (fricative)
4. மருங்கொலி (lateral)
5. வருடொலி (flap)
6. ஆடொலி (trill)
7. உயிரொலி (vowel)

**தடையொலி**

வாயறையின் ஓரிடத்தில் மூச்சுக்காற்று முழுவதும் தடை செய்யப்பட்டு திடீரென்று வெடிப்போடு வெளியேறினால் அதற்கு வெடிப்பொலி அல்லது தடையொலி என்று பெயர். அப்போது அண்ணக்கடை அடைப்பு ஏற்படும். தமிழில் வல்லின ஒலிகளே வெடிப்பொலிகளாகும். க, ச, ட, த, ப ( k,c,t,t,p).

**மூக்கொலி**

அடைப்பொலி போலவே அமைந்து அண்ணக்கடை திறந்து மூக்கறை வழியே மூச்சுக்காற்று வெளியே செல்லும்போது மூக்கொலி அல்லது

மெல்லினம் தோன்றும். பெரும்பாலும் மூக்கொலி உண்டாகும்போது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன (ங,ஞ,ண,ந,ம,ன) (n,n, n, m, n).

## உரசொலி

வாயறையில் மூச்சுக்காற்று வரும்போது முழுவதும் தடுக்காமல் மூச்சு வெளியேறும் பாதையை ஒலிப்பானால் குறுக்கி அந்த இடுக்கின் வழியே செலுத்தினால் உராய்வுத்தன்மை (friction) ஏற்படும். இப்படி உராய்வுத் தன்மையோடு பிறக்கும் ஒலிகளே உரசொலிகள் எனப்படுகின்றன. தமிழில் சகரம் (c) பாண்டி நாட்டுத் தமிழைத்தவிர பிற மாவட்டங்களில் (s) என்று உரசொலியாகவே உச்சரிக்கப்படுகிறது. உரசொலி உண்டாகும்போது குரல்வளை மடல்கள் அதிர்ந்தும் அதிராமலும் இருக்கலாம். அப்போது அண்ணக்கடை அடைப்பும் ஏற்படும் ( $\beta$ , f, $\partial$ , s, $\gamma$ ,h ).

## மருங்கொலி

மூச்சுக்காற்று வாயறையில் ஓர் இடத்தை அடைத்து நாக்கின் இருமருங்கிலும் வெளியேறும்போது பிறக்கும் ஒலி மருங்கொலி எனப்படுகிறது. ல, ள, ழ, ( l,f.f) மூன்றும் மருங்கொலிகளாகும்.

## வருடொலி

நாக்கின் நுனி மேலே எழுந்து உள்நோக்கி வளைந்து பின்வேகமாகக் கீழே வரும்போது அண்ணத்தில் மோதுவதால் எழுகிற ஒலியே வருடொலி. தமிழில் (r) என்பது வருடொலியாகும்.

## ஆடொலி

மூச்சுக்காற்று வெளியேறும்போது இதழ்களோ நுனி நாக்கோ உள்நாக்கோ வேகமாக அதிர்ந்து ஆடும்படி அமைகிற ஒலியே ஆடொலி எனப்படுகிறது. இன்று குமரி மாவட்ட மக்களால் மட்டுமே தமிழ் வழக்கில் ற (r) என்ற ஆடொலி உச்சரிக்கப்பட்டு வருகிறது.

## உயிரொலி

மூச்சுக்காற்றானது வாயறையில் எவ்விதத் தங்கு தடையுமின்றி அதாவது, இயங்கு ஒலிப்பான்களுக்கும் இயங்கா ஒலிப்பான்களுக்கும் இடையே தடையின்றிச் செல்லும்போது உயிரொலிகள் பிறக்கின்றன. மெய்யொலிகள் பிறக்கும்போது முழுத்தடையோ சிறிதளவு தடையோ நிச்சயம் இருக்கும்.

உயிரொலிகளை வருணிப்பதற்கு மூன்று முக்கியமான அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை.

1. இயங்கும ஒலிப்பானாகச் செயல்படும் நாக்கின் நிலை (நா நிலை).

2. நாக்கு அண்ணத்தை நோக்கி எழுகிற உயரத்தின் அளவு (நா உயரம்)

3. ஒலிப்பின்போது ஏற்படும் இதழ்களின் அமைப்பு (இதழ்–விரி, குவிநிலை) என்பன.

நா நிலை மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. ஒலிப்பின்போது நாக்கு முன்னும் பின்னும் நகரும் நிலையினையொட்டி பகுதியொட்டி உயிரொலிகள் முன்னுயிர்கள் (front vowels), நடுவுயிர்கள் (central vowels), பின்னுயிர்கள் (back vowels) என்று பாகுபடுத்தப்படுகின்றன.

நாக்கு அண்ணத்தை நோக்கி எழுகிற உயரத்தை அடிப்படையாகக் கொண்டு மேல் (high), இடை (mid), கீழ் (low) என்று பெரும்பிரிவாகவும் மேல் என்பதை மேல் (high) கீழ்–மேல் (lower-high) என்று இரண்டாகவும் இடை என்பதை மேலிடை (higher mid) நடு இடை (mean mid) கீழ் இடை (lower mid) என்று மூன்றாகவும் கீழ் என்பதை மேல்–கீழ் (higher-low) கீழ் (low) என்று இரண்டாகவும் பிரிக்கலாம். இப்படி உயரத்தை மட்டும் ஏழு பிரிவுகளாகப் பிரித்தாலும் மொழிகளிலுள்ள ஒலிகளை விளக்குவதற்கு இந்த ஏழுவகையான பிரிவுகள் அனைத்தும் தேவைப்படுவதில்லை. ஆயினும் ஒலிகளை நுட்பமாக அறிவதற்கு இவை பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இதழ்களின் அமைப்புநிலையானது இரண்டு பிரிவாகப் பிரித்து விளக்கப்படுகிறது. அவையாவன :

1. இதழ்குவி உயிர்கள் (rounded voweld)

2. இதழ்விரி உயிர்கள் (unrounded vowels)

உயிரொலிகள் பெரும்பான்மையும் குரல் ஒலிகளாகவே அமையும். அதனால் குரல் ஒலி, குரலிலா ஒலி என்று வேறுபடுத்திக் குறிப்பிடுவது இல்லை. ஆயினும் சில மொழிகளில் குரலிலா உயிர் ஒலி இருப்பதாக மொழியியல் அறிஞர்கள் ஆய்வுசெய்து உணர்த்தியுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| [i] | இ | – | உயர்முன் இதழ் விரி குற்றுயிரொலி |
| [i:] | ஈ | – | உயர்முன்இதழ் விரி நெட்டுயிரொலி |
| [e] | எ | – | இடைமுன் இதழ் விரி குற்றுயிரொலி |
| [e:] | ஏ | – | இடை முன் இதழ் விரிநெட்டுயிரொலி |
| [a] | அ | – | கீழ் நடு இதழ் விரி குற்றுயிரொலி |
| [a:] | ஆ | – | கீழ் நடு இதழ் விரி நெட்டுயிரொலி |
| [o] | ஒ | – | இடை பின் இதழ் குவி குற்றுயிரொலி |

| | | | |
|---|---|---|---|
| [o:] | ஒ | – | இடை பின் இதழ் குவி நெட்டுயிரொலி |
| [u] | உ | – | உயர் பின்இதழ் குவி குற்றுயிரொலி |
| [u:] | ஊ | – | உயர் பின் இதழ் குவி நெட்டுயிரொலி |

தமிழ் போன்ற மொழிகளில் இத்தகையப் பாகுபாட்டின் அடிப்படையில் பத்து உயிரொலிகள் உள்ளன.

## ஈருயிர்

ஓர் உயிர் ஒலியின் உச்சரிப்போடு தொடங்கி மற்றொரு உயிரொலியின் உச்சரிப்போடு முடிவடையும் உயிரொலியின் ஒலிப்பே ஈருயிர் (diphthong) எனப்படுகிறது. இதுவொரு நெட்டுயிராக ஒலிக்கப்படுகிறது. இரண்டு உயிரொலிகளின் சாயலும் இந்நெட்டொலியில் காணப்படும். தமிழ் ஐ, ஔ ஆகிய இரண்டும் இவ்வாறு ஒலிக்கப்படும் ஈருயிர்களாகும்.

**எ.கா.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | + | இ | – | ஐ | [ai] |
| அ | + | உ | – | ஔ | [au] |

இங்கு இரண்டு உயிர்கள் தொடர்ச்சியாக ஒலிப்பதைக் குறிப்பிடாது, இணைந்து ஓர் உயிரொலி போன்று ஒலிக்கப்படும் தன்மையைக் காண முடிகிறது.

## அரையுயிர்

இது உயிரொலி போன்று உச்சரிக்கப்பட்டாலும் மெய்யொலி போன்ற ஒலிப்பிடம் உடையதாக அமையும். எனவே மெய்யொலியின் தன்மையே அதிகம் பெற்றிருப்பதாகக் கருதப்படும். மேலும் உயிரொலி போன்று ஈத அசையாக (syllable)அமையாது. அதனால் ய, வ இரண்டும் தமிழில் அரை உயிர்களாகக் கருதப்படுகின்றன. வை (இ), (உ) என்ற உயிர்களின் தன்மையைப் பெற்று விளங்குகின்றன.

## மெய்யொலிகள்

ஒலிப்பிடத்தையும் (இயங்கும் ஒலிப்பானும் இயங்கா ஒலிப்பானும் தொடர்பு கொள்ளுமிடம்) ஒலிப்பு முறையையும் அடிப்படையாகக் கொண்டு மெய்யொலிகளைத் தெளிவாக விளக்கலாம்.

| | | |
|---|---|---|
| இதழ் ஒலிகள் (labial sounds) | – | ப,ம [p,m] |
| பல்லொலிகள் (dental sounds) | – | த,ந [t,n] |
| அண்பல்லொலிகள் (alveolar sounds) | – | ற,ர,ண [r, r, n] |